JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **12/2014** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 4** | Prosecution /Defence / Court | |
| Name | அருண்குமார் | Village | வேப்பம்பாளையம் |
| Father's Name | கணேசன் | Taluk | பெருந்துறை |
| | | Age | |

**A**2 **present**. **A**1 **absent**. **Petition U/s**.317 **Cr.P.C.**, **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 12.05.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். 02.04.2013 ம் தேதி காலையில் எனது தம்பி வீட்டில் திருட்டு போனது சம்பந்தமாக என் தம்பி வீடு உள்ள வேப்பம்பாளையம் EB நகரில் பெருந்துறை சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பார்வை மகஜரில் முதலாவதாக நானும், இரண்டாவதாக பக்கத்து வீட்டைச் சேர்ந்த தங்கராஜ் என்பவரும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பெருந்துறை காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**1 , 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** சம்பவம் சம்பந்தமாக எப்போது தகவல் கிடைத்தது என்றால் திருடு போன அன்றையதினம் மதியம் 1.00 மணிக்கு தகவல் கிடைத்தது. தகவல் கிடைத்தவுடன் என் தம்பி வீட்டிற்கு ½ மணி நேரத்தில் வந்தேன் என்றால் சரிதான். நான் சென்று பின்பு ¼ மணி நேரத்தில் போலீசார் வந்தார்கள். பூட்டிய இருந்த வீட்டையும், கதவையும் போலீசார் பார்வையிட்டார்கள் என்றால் சரிதான். அதை போலீசார் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள் என்றால் நினைவில் இல்லை. போலீசார் அப்போதே என்னிடமும், என் தம்பி மனைவியிடமும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். சாட்சிகள் மகேஸ், பிராபகரன், சிந்து ஆகியோர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்களை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான்.

2. அ.சா.ஆ.5 ஆவணத்தில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும் திருடு போனது பற்றியும், திருடு போன சொத்துக்கள் பற்றியும் அதில் எழுதி இருந்தது. நான் வழக்கிற்காக சம்பவ இடத்தில் இருந்ததாகவும், கையெழுத்து செய்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை